**24.08.2021**

**CC 105/2017 PW1**
**Mathankumar S/o.Venkadasalam**

**எதிரி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி:**

27.09.2010 அன்று நடந்த விபத்தில் இறந்த ரேவதி என்பவர் எனது தங்கை என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதி ஆர்விபட்டி சமுதாயக்கூடத்திலிருந்து ஆர்விபட்டி பூங்கா செல்லும் சாலையில் தான் நடந்தது என்றால் சரிதான். மேற்படி சாலை சுமார் 10 அடி என்றால் சரியல்ல. சுமார் 15அடி அகலம் இருக்கும். சம்பவம் நடந்த சாலையில் இரண்டு கார்கள் ஒரே நேரத்தில் இடது வலது பக்கம் செல்லலாம் என்றால் சரிதான். விபத்தில் இறந்த எனது தங்கை படித்த கல்லூரியானது சௌராஸ்ட்ரா கல்லூரி ஆகும். என் வீட்டிலிருந்து சுமார் 7கிமீ தூரத்தில் கல்லூரி உள்ளது என்றால் சரிதான். வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்ல சுமார் 15நிமிடம் மட்டும்தான் ஆகும். எனது தங்கை படித்த கல்லூரி காலை சுமார் 10 முதல் மாலை 3மணி வரை நடைபெறும் என்றால் சரிதான். விபத்து நடந்த அன்று நானும் எனது தங்கையும் காலை 10மணிக்கு தான் வீட்டிலிருந்து கிளம்பினோம் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. விபத்து நடந்த நேரம் வீட்டிலிருந்து கிளம்பி 10நிமிடத்திற்குள் மேற்படி விபத்து நடந்தது. விபதது நடந்தது காலை 10 முதல் 10.15 என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. கல்லூரிக்கு 10மணிக்கு செல்லவேண்டும் என்பதால் நேரம் தாழ்ந்து வீட்டிலிருந்து கிளம்பியதால் வேகமாக சென்றுகல்லூரியில் விடவேண்டும் என்ற எண்ணத்தில் வேகமாக சென்றதால் விபத்து நடந்ததற்கு நான் தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தனர். போலிசார் எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் தற்சமயம் எனக்கு ஞாபகம் இல்லை. காரணம் விபத்து நடந்தது 11 வருடம் ஆகிவிட்டது. என்னுடைய முதல் விசாரணையில் சங்கீதா வாட்டர் சப்ளையர் என்ற லாரியை ஓட்டிவந்த டிரைவர் அதிவேகமாக வந்து என்மீது மோதிவிட்டார்என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் நான் சொல்லியுள்ளேன். அந்த லாரியின் பின்சக்கர டயர் ஏறிதான் என் தங்கை இறந்துவிட்டார் என்று நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். லாரிக்கும் டிராக்டருக்கும் எனக்கு வித்தியாசம் தெரியும். நான் சாட்சி அளிக்கும்போது லாரி என்று சொல்லியுள்ளேன் டிராக்டர் என்று சொல்லவில்லை என்றால் அப்படி நான் சொல்லியிருக்க வாய்பபில்லை. போலிசார் வந்து மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர் என்று மு.விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் நான் மருத்துவமனையில் நான் இரத்தக்காயத்துடன் மயக்க நிலையில் இருந்தேன் அதனால் என்ன நடந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் விசாரித்தபோது வாக்குமூலத்தில் நான் கையெழுத்திட்டேனா என்றால் ஞாபகம் இல்லை. லாரி ஓட்டுநர் விபத்து நடந்தவுடன் ஓடிச்சென்றார் என்று நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் எதிரி ஓடிவந்தபோது அங்கிருந்த ஆட்கள் வருவதைப்பார்த்து ஓடிவிட்டார். அந்த சமயத்தில் என்னிடம் நிறைய கையெழுத்து வாங்கினார்கள். கண்தானம் செய்வதற்கும் கையெழுத்து வாங்கினார்கள். எந்த கையெழுத்து என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் எம்பிஏ படித்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும்

புகாரிலுள்ள வரிகள் என்னுடையது அல்ல அதிலுள்ள கையொப்பம் மட்டும் என்னுடையதுதான். போலிசார் என்னிடம் பல கையெழுத்துக்கள் வாங்கினார்கள் அதில் ஒரு கையெழுத்துதான் புகாரிலுள்ளது என்றால் சரியல்ல. புகாரிலுள்ள சங்கதிகள் அனைத்தும் காவல் துறையால் உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த இடமானது பரசுராமன் பலசரக்கு கடை முன்பு தான் நடந்தது என்றால் சரிதான். மேற்படி கடை கிழக்கு பார்த்த வாசல் உள்ளது என்றால் சரிதான். விபத்து சாலையின் திசை எல்லைகள் எனக்குத் தெரியவில்லை. வாகனத்தின் பின்பகுதிதான் என்மீது மோதியது என்றால் சரிதான். எனது வாகனத்தின் புட்ரஸ் சேதம் அடைந்துள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் ஓட்டிச்சென்ற வாகனத்தின் புட்ரஸ்ட் எதிரி ஓட்டிவந்த வாகனத்தின்மீது மோதிதான் நான் இடதுபுறமும் எனது தங்கை வலதுபுறம் விழுந்துவிட்டார் என்றாலும் என்னுடைய கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி ஓட்டிவந்த வாகனம் தான் வேகமாக வந்தது. மேற்படி விபத்துக்கு நான் தான் காரணம் என்றாலும் எதிரிக்கும் இந்த விபத்துக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. என்னை போலிசார் விசாரித்தபோது நான் டிரைவிங் லைசன்ஸ் போலிசாரிடம் கொடுத்துள்ளேன். நான் போலிசாரிடம் லைசன்ஸ் ஒப்படைக்கவில்லை என்றாலும் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் தான் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் போலிசாரிடம் ஒப்படைத்தேன். எனக்கு வாகன ஓட்டுநர் உரிமம் இல்லையென்பதால் எனக்கு விபத்து இழப்புக்காப்பீடு கிடைக்காது என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.